சுதந்திர ஆட்சியில் பாட்டாளிகள் பரதவிப்பதா?

Phone No 4502

விலை அரை அணா

Regd. No. M. 5458

இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A.

MALAIMANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (14—6—50) வெளியூர் (15—6—50) [இதழ் 278

காந்திநிதி, கஸ்தூரிநிதிகளால் கண்ட பயன் என்ன?

..........................(:—:)..................

மாற்றுக கருத்துக்களுக்கு மதிப்பு தராத சர்க்கார் சர்க்காராகுமா?

..............(—)..............

சுட்டுக்கொல்லும் அநீதி - - - - தொலைய வேண்டும்

மதுரை மாவட்ட தி. மு. க. மாநாட்டில் ஈ. வெ. கி. சம்பத் தலைமையுரை

சோழவந்தான், ஜூன். 11—

காந்தி நிதியென்றும், கஸ்தூரிபாய் நிதி என்றும், பல கோடிக்கணக்கான பணத்தை வசூலித்துப், பாழாக்கியவர்கள், தியாகிகளின் நிதி என்று நிதிதிரட்டி, போராட்டத்தியாகிகளுக்கு உதவி அளித்திருக்கலாம். அதைவிட்டு, தங்கள் கையில் அதிகாரம் இருக்கிறதென்ற ஆணவத்தால், சர்க்கார் கையில் உள்ள நிலங்களைப் பங்கு போட்டுக்கொண்டது நியாயம்தானா? சர்க்காரின் கொள்கையை மறுக்கக்கூடிய பலர், நாட்டிலே வாழ்கின்றனர். இவ்வளவு மாறுபட்டக் கருத்துக்களை அலட்சியம் செய்து, ஆணவத்தால், ஆளவந்தார்கள். நிலத்தைப் பங்கு போட்டுக்கொண்டது தவறு எனபேன்.

இன்று காலை 10 மணிக்கு இரண்டாம் நாள், மதுரை மாவட்ட திராவிட முன்னேற்றக்கழக மாநாடு, வெகு சிறப்பாக ஆரம்பமாகியது. 15000 மக்களுக்கு மேல் வந்து கூடி இருந்தனர். தாய்மார்களும் ஏராளமாகக் கலந்துகொண்டனர்.

மதுரையிலிருந்து சோழவந்தான் வரை தனி டஸ்வசதிகள் செய்யப்பட்டிருந்தன பலத்த ஆரவாரத்திற்கிடையே, தோழர் ஈ. வி. கே. சம்பத் அவர்கள் தலைமைப் பேச்சைத் துவக்கினார்கள்.

அவர் ஆற்றிய சொற்பொழிவாவது;

அன்புள்ள தோழர்களே! தாய்மார்களே!!

திராவிட முன்னேற்றக் கழகமானது சென்னையில் துவக்கவிழா நடைபெற்ற சில மாதங்களில், சுமார் 500 கிளைக் கழகங்கள் மாகாணமெங்கும் தோன்றியிருக்கின்றன.

தி. மு. கழகம் தோன்றிய போது, இதனால் நாட்டிற்கு என்ன நன்மைகள் செய்ய முடியும் என்று கேலி-கிண்டல்கள்-கிளப்பினர் அன்று. இன்று சிக்கலானப் பிரச்னைகளில்கூட, தி. மு. கழகத்தினர் கருத்து என்ன என்று கேட்கும் அளவிலே - அது வளர்ந்துள்ளது. ஆனால் மக்களின் ஆர்வத்தினை - ஆவலைப் பூர்த்திசெய்யும் அளவிலே அதுவளரவில்லை, காங்கிரஸ் தோழர்கள் நம்மைப் பற்றி என்ன நினைத்தார்கள் என்பதனைச் சற்றுச் சிந்திக்கவேண்டும்.

துவேஷப் பிரசாரம்!

"திராவிடர் கழகத்தின் தலைவருக்கு, கல்யாணம் செய்துகொள்ளக்கூட உரிமையளிக்காத இவர்கள், மக்களுக்கு உரிமை வாங்கித் தர பாடுபடுவதாக நாட்டிலே பிரசாரம் செய்கின்றனர். திராவிடர் கழகம் ஒழிந்ததுபோல், திராவிட முன்னேற்றக் கழகமும் நசிந்து ... பெற்றுப்போய் ... யாள ம

கிரி மாதவமேனன் முதற்கொண்டு, காமராஜர் வரை நம்மீது துவேஷப் பிரசாரம் செய்து பார்த்தனர். ஆனால். இந்தத் துவேஷப் பிரசாரத்தின்மூலம், தங்களுக்கு வெற்றி கிடைக்கவில்லையே என்ற காரணத்தால், தங்களுக்கு இருக்கும் அதிகாரத்தின் மூலம், ஆணவத்தைததுணை கொண்டு, நம்மீது, நம் கூட்டங்களுக்குத் தடை விதித்தனர். இதன்மூலமாவது நமது இயக்கம் நசிந்து விடும் என்று எண்ணினர். அதுமட்டுமா? இன்று தோழர் அண்ணாத்துரை அவர்கள் தீட்டிய 'இலட்சிய வரலாறு' 'ஆரிய மாயை' ஆகிய புத்தகங்களை அச்சிட்டோர் - வெளியிட்டோர் - உரிமையாளர் ஆகியோரைக் கோர்ட்டிலே கொண்டுவந்து, குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தியுள்ளனர். சிறந்த, பிரசாரத்திற்காக நடத்தும்நாடகங்களுக்கும், மாநாடுகளுக்கும்கூட, தமாஷா வரி வேண்டும் என்று கேட்கிறார்கள். இத்தவிதமான ஈனச் செயலைக் கண்டு, இளைஞர் உலகம் உற்சாகம் அடையுமே தவிர, உள்ளச் சோர்வடையப் போவதில்லை. இன்று, மனிதனின் அடிப்படையான தேவைகளுக்கெல்லாம், கட்டுப்பாடுகள் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில், மந்திரிகள் அடுத்துவரும் தேர்தலில் தங்கள் 'நாற்காலியை' ஊர்ஜிதம் செய்துகொள்ள கன்னியாகுமரி முதல், கல்கத்தாவரை, சர்க்கார் செல

(8-ம்பக்கம் பார்க்க)

பிரிட்டனில் அதிகமாக சிகரெட்பிடிப்பது பெண்களே

——(...)——

ஆண்கள் மிட்டாய் சாப்பிடுவதில் முனைந்திருக்கிறார்களாம்!

லண்டன், ஜூன் 13—

"பிரிட்டனில் இப்போதெல்லாம் ஆண்கள் சிகரெட் பிடிப்பதைக் குறைத்துக்கொண்டு விட்டார்கள். சிகரெட் அதிகமாகப் பிடிப்பது பெண்களே. ஆண்கள் குழந்தைகளைப் போல, பெப்பர்மெட்டுகளை அதிகம் சாப்பிடுகிறார்கள். இதுதான் இப்பொழுது ஏற்பட்டுள்ள சமூகப் புரட்சி என்று, ஸ்காபரோ மேயர் மிட்டாய் விற்பனையாளர்கள் மாநாட்டில் பேசுகையில் கூறினார்.

தான் முன்பெல்லாம் ஒரு தினத்திற்கு 40 சிகரெட்டுகள் பிடிப்பது வழக்கமென்றும், இப்பொழுது விலையில் கட்டிவரவில்லையாதலால், அவ்வழக்கத்தையே கைவிட்டுவிட்டதாகவும் அவர் கூறினார். "என்னைப்போல் அதிகம்பேர் மிட்டாய்சாப்பிடுவதில் ஆவல் காட்டி வருகின்றனர்" என்றும் அவர் கூறினார்.

ஆஸ்திரேலியா பவுன் மதிப்பு திருத்தியமைக்கப்படும்?

சிட்னி, ஜூன் 13—

ஆஸ்திரேலியா பவுன் எதிர்கால பவுன் மதிப்பு விஷயமாக, பிரதம மந்திரி மென்ஸிஸ் மௌனம் சாதித்து வருகிறார். வாழ்க்கைச் செலவைக் குறைப்பதன்பொருட்டு பவுன்மதிப்பைத்திருத்தியமைக்கும் படியான நிலைமை ஏற்படலாமென்று கூறப்படுகிறது.

'ரெடிமேட்' வீடுகள்

சிரியாவில் தயாரிப்பு

டமாஸ்கஸ், ஜூன். 13—

சிரியாவுக்கு 'ரெடிமேட்' வீடுகளைச் செய்து தருவதாக ஒரு ஜெர்மன் கம்பெனி முன்வந்திருக்கிறது.

இந்த ரெடிமேட் வீட்டில் ஒரு சமையல் அறை, ஒரு படுக்கை அறை, ஒரு குளிக்கும் அறை இதர வசதிகள் இருக்கின்றன.

இந்த ரெடிமேட் வீடுகளை வாங்குவதென சிரிய டூரிஸ்ட் இலாகா தீர்மானித்திருக்கிறது.

நார்வேயில் புது கதிர் ஆராய்ச்சி

ஆஸ்லோ, ஜூன் 13—

நார்வேயில் புதுவிதக் கதிர்கள் ஐவுனி மில்களில் பரீட்சார்த்தமாக உபயோகிக்கப்பட்டு வருகிறது. இதனால் ஐவுனி உற்பத்தி அதிகரிக்கக் கூடுமாம்.

நோயற்ற வாழ்வு வாழச் செய்யலாம்

————(0————

அமெரிக்க மருத்துவரின் அரும் முயற்சி

நியூயார்க், ஜூன் 13—

மக்களுக்கு வியாதியே வராமல் செய்ய முடியும் என்பதை நடத்திக்காட்ட, நியூயார்க் ஆஸ்பத்திரி டாக்டர் ப்ளூஸ்டோன் முன்வந்திருக்கிறார். இதைப் பரீட்சார்த்தமாக நடத்திக்காட்ட அவர் 500 குடும்பங்களைப் பொறுக்கி எடுத்திருக்கிறார். இவர்களுக்குச் சுமார் 300 டாக்டர்கள் ஒரு ஆண்டிற்கு, இலவசமாகச் சிகிச்சை செய்வர்.

அக்குடும்பத்தினர், டாக்டர்கள் சொற்படியே உணவு உட்கொள்ள வேண்டும். தேகப் பயிற்சி செய்ய வேண்டும். குழந்தைகள் பிறப்பது விஷயமாகவும் டாக்டர்கள் சொற்படியே கேட்க வேண்டும். கவலைப்படாதிருக்கவும் அவர்களுக்கு வழி காட்டப்படும்.

மக்கள் தங்கள் முறைகளையே மாற்றி, ஆரோக்கியத்துடன் வாழ வழி செய்வதே டாக்டர் ப்ளூஸ்டோனின் கருத்து.

ஐ. நா. முட்டுக்கட்டையைத் தீர்க்க முயற்சி?

பிரான்ஸ் செஞ்சீனாவை ஆதரிக்கும்

லேக்ஸக்ஸஸ், ஜூன் 13—

செஞ்சீனாவை ஐ. நா.வில் மெம்பராக அனுமதிக்கும் விஷயமாக ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டை, இன்னும் மூன்று மாத காலத்தில் தீரலாம் என்று, இங்குள்ள விமர்சகர்கள் கூறுகிறார்கள். பிரான்ஸ் அநேகமாக செஞ்சீனா ஐ. நா. மெம்பரைச் சேருவதை ஆதரிக்கும் என்று இவர்கள் கூறுகிறார்கள்.

பிரான்ஸ் ஆதரிக்க முன்வரும் பட்சத்தில், பாதுகாப்புக் கௌன்ஸிலில் செஞ்சீனாவை ஆதரிக்கும் நாடுகள் எண்ணிக்கை ஆறு ஆகும்.

பிரச்னை தீர, இன்னும் ஒரு பாதுகாப்புக் கௌன்ஸிலில் மெம்பர் நாடு செஞ்சீனாவை ஆதரிக்க வேண்டியிருக்கும். அநேகமாக எகிப்து ஆதரிக்க முன் வரலாம் என்று மாஞ்செஸ்டர்கார்டியன் நிருபர் கூறுகிறார்

ஆனால் சில விமர்சகர்கள் பிரான்ஸ், எகிப்து இவ்விரு நாடுகளும் செஞ்சீனாவை ஆதரிக்க முன்வரும் என்பது சந்தேகமே என்று கருதுகின்றனர். பிரெஞ்சு இந்தோசீன நிலைமை முற்றி வருவதை இவர்கள் சுட்டிக்கா...

ஹங்கேரிகைத்தொழில் துறையில் நெருக்கடி

வியன்னா, ஜூன் 13—

ஹங்கேரியில், கைத்தொழில் உற்பத்தித் துறையில் நெருக்கடி ஏற்பட்டிருப்பதால், இத்தாலியுடன் நடைபெற்றுவந்த வியாபாரம் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாக ஆஸ்திரியாவுக்குக்கிடைத்துள்ள செய்திகள் கூறுகின்றன.

தொழிலாளர்களின் ஒத்துழையாமை, ரஷ்யாவின் பொருளாதார கோரிக்கைகள் மேற்கு நாடுகளுடன் வர்த்தகத்தில் போட்டிபோட சக்தியின்மை முதலியவையே நெருக்கடிக்குக் காரணம் என்று தெரிகிறது.

பெல்ஜியத்திற்கு ஸ்விஸ் கடன்

பிரஸ்ஸல்ஸ், ஜூன் 13—

பெல்ஜிய சர்க்காருக்கு ஸ்விஸ் கடன் உதவி தருவது சம்பந்தமாக, பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருவதாகத் தெரிகிறது.

அபூர்வமான ரஷ்ய நாணயங்கள்

லண்டன், ஜூன் 13—

18-வது நூற்றாண்டின் ஆரம்பகாலத்தைச் சேர்ந்த அபூர்வ ரஷ்ய நாணயங்கள், இப்பொழுது ... திற்கு வரும் என்று தெரி... இவை அநேகமாக ரஷ்ய சர்க்கா... வாங்கிவிடலாம்.

புரட்சிக்காரர்களால் கொல்லப்பட்ட கிராண்ட்டியூக் ஜார்ஜ் என்பவர், இந்த நாணயங்களைச் சேகரித்தாராம். பின்னர், இந்த நாணயம் எங்கெங்கோ மாறி, பின்னர் ஸர்ந்த ட்யூக்கின் மனைவியிடமே வந்து சேர்ந்திருக்கிறது.

மாலை மணி

சென்னை 14-6-50 புதன்கிழமை

ஒலி ஒளியாகட்டும்!

"சட்டபூர்வமாகவும், அமைதியாகவும்பிரசாரம் நடத்துவதை சர்க்கார் அனுமதிக்கும்"

சென்னை முதலமைச்சர் தோழர் பி. எஸ். குமாரசாமி ராஜா, சென்ற இரண்டு நாட்களுக்கு முன்பு சென்னை வானொலி நிலையத்திலிருந்து நாட்டிற்குச் செய்தியாகச் சில வெளியிடும்போது, மேற் குறித்தவாறு குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சரின் பேச்சிலே ஒலிக்கின்ற இந்த ஒலி, அவரது ஆட்சியின் செயல்முறைகளிலே, ஏனோ தானோ ஒலிப்பதுமில்லை—ஒளிர்வதுமில்லை!

பேச்சுக்கும், செயலுக்கும் இருக்கும் வேறுபாடு—முரண்பாடு—நேர் எதிர்மாறுபாடு ஆகிய இவற்றைக்காண வேண்டுமானல், காங்கிரஸ் ஆளவந்தார்களிடம் ஏராளமான அளவுக்கு எதிர்பார்க்கலாம்.

பேச்சுரிமை, எழுத்துரிமை பற்றி அழகு மொழிபேசிவரும் இந்த ஆணழகர்கள், செயலாற்றும்போது, ஆணவ அடக்குமுறைகளைத்தான் வீசிவருகிருர்கள் என்பதற்கு திராவிட முன்னேற்றக்கழகத்தைப்பொறுத்த வரையில், இவர்கள் நடந்துகொண்டுவரும் தன்மையே தெள்ளத் தெளிய விளக்கிக் காட்டும்.

திராவிட இயக்கக் கருத்துடையார் எழுதும் புத்தகங்கள், தீட்டும் காவியங்கள், நடத்தும் பத்திரிகைகள் ஆகிய வற்றிற்குத் தடைவிதித்தும், இவற்றைப் பறிமுதல் செய்தும், ஜாமீன் தொகை கேட்டும், நடக்கும் நாடகங்களையும் போடும் கூட்டங்களையும் தடைசெய்தும் அடக்குமுறை அம்புகளை அளவுக்கு மீறி, அமைதி குலைக்கும் வழியில வீசிவிட்டு, "சட்ட பூர்வமாகவும் அமைதியாகவும் பிரசாரம் நடத்துவதை சர்க்கார் அனுமதிக்கும்" என்று முதலமைச்சர் வீராப்பு பேசிநிற்கின்ருர் என்ருல், இதற்கு என்ன பொருள்? அறியாமை என்று கூறுவதா? ஆணவம் என்று கருதுவதா? அலட்சியம் என்று சொல்லுவதா? அல்லது மந்திரி மாதவமேனன் வரிசையிலேயே இவரையும் வைத்து எண்ணுவதா?

திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களின் எண்ணமோ, எழுத்தோ, ஏடோ பத்திரிகையோ, நாடகமோ, நாட்டில் அமைதியைக் குலைக்கும் வழியில், இதுவரையில் [illegible] கொண்டன என்று சொல்லுவதற்கு, அரசாங்கத்தினிடம் எள்ளளவுக்குக் கூட ஆதாரம் ஏதேனும் உண்டா, என்று கேட்கிருேம். இந்த இயக்கத்தாரின முன்னேயடியில் சென்ற, சென்ற பத்து ஆண்டு கால வரலாற்றைப் புரட்டிப் பார்த்தாவது, ஒரு ஆதாரம் இந்த ஆட்சியாளரால் கண்டுபிடிக்க முடியுமா? திராவிட முன்னேற்றக் கழகத்தார்கள் நாட்டில் கருத்துப் புரட்சி செய்திருப்பார்களேயொழிய, கலகப் புரட்சிசெய்தவர்களல்லவே! அப்படியிருந்தும், வளர்கின்ற ஒரு சிறந்த கட்சி எதிர்ப்புறத்தில் நின்று வேலை செய்கிறதே என்று கண்டு, பொருமை கொண்டு, எப்படியேனும் அதனை அழித்துவிடவேண்டும் என்ற கட்ட சிந்தையோடு, ஆணவ அடக்குமுறைச் சட்டங்கள் பயன் படுத்தப்பட்டிருக்கின்றனவேயல்லாமல், நீதியோடு, நேர்மையோடு, நாணயத்தோடு அவைகள் வீசப்பட்டதாக யாராலும் சொல்ல இயலாது; மந்திரிமார்களாலேயே மார்தட்டிவந்து கூறமுடியவில்லை.

அமைதியான பிரசார முறையை அழகுபட, அறிவுத்திறனோடு கையாண்டுவரும் திராவிட முன்னேற்றக் கழகத்தை, அடக்கி ஒடுக்கிவிட ஒரு பக்கத்தில் திட்டம் தீட்டிக்கொண்டிருக்கும் அரசாங்கம், அமைதியான பிரசாரத்திற்கு அனுமதியளிக்கும் பெரும் பண்பு தன்னிடத்தில் உண்டு என்று வாய்த்தம்பட்டம் அடித்துக் கொண்டிருக்கிறது என்ருல் இந்த அரசாங்கத்தை "வெளிப்பகட்டு ஒரு கட்சி அரசாங்கம்" என்று சொல்லத்தானே எவரும் துணிவர்.

இந்நாட்டில், மக்களின் மனதை நல்லவழியில் மாற்றும் அறிவுப் பிரசாரத்தின் மூலமே, மக்கள் மன்றத்தைச் சிறப்புறச் செய்யமுடியும் என்ற முடிந்த கொள்கையைக் கொண்டவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தார். உண்ணுவிரதம் போன்ற சாத்வீக சத்தியாக்கிரக சண்டைத்தனங்களாலோ அல்லது தீயிடுதல் கொள்ளையடித்தல், கொலை புரிதல் நாசவேலைகள் செய்தல், கள்ளத்தனமாய்ச் சதிகள் செய்தல் போன்ற பலாத்காரச் செயல்களாலோ உண்மையான மக்கள் ஆட்சியைக் காணமுடியாது என்று நம்புபவர்கள் அவர்கள். ஆகவேதான் அமைதியான அறிவியக்கப் பிரசாரத்தை உண்மையாகத் தொடர்ந்து செய்து வருகின்றனர்.

இந்நாட்டு கம்யூனிஸ்டுகள் கையாண்டுவரும் பலாத்காரச் செயல்களையும், நாசவேலைகளையும் வன்மையாகக் கண்டிப்பவர்கள்தாம் திராவிட முன்னேற்றக் கழகத்தவராகிய நாம். அச்செயல்களால் நல்லாட்சியை அமைக்க முடியாது என்பதோடு அவைகளைப் பைத்தியக்காரச் செயல்கள் என்று அந்நாள் தொட்டுக் கருதிவருபவர்களும் நாம். நாம் என்றுமே [illegible] நாசத்தைத் தவிர வேறொன்றையும் தராத பலாத்காரத்தில் நம்பிக்கையற்றவர்கள். ஆகையால் அப்படிப்பட்ட பலாத்காரம் யாரிடம் காணப்பட்டாலும், எப்பொழுது காணப்பட்டாலும் அதனைக் கண்டித்து ஒதுக்குபவர்களாக இருந்து வருகிருேம்.

ஆனல், காங்கிரஸ் முதலமைச்சர் தோழர் பி. எஸ். குமாரசாமிராஜா, கம்யூனிஸ்டுகளின் பலாத்காரச் செயல்களையும் நாச வேலைகளையும் வானெலிப் பேச்சிலே கண்டிக்க முன் வந்திருப்பதுகாண ஆச்சரியப்படாமலிருக்க முடியாது. ஆச்சரியம், கருத்தைப் பொறுத்தல்ல, கருத்தைக் கூறியவரின் நாணயத்தைப் பொறுத்துதான் ஏற்படுகிறது. ஏனெனில் ஒரு காலத்திலே அகிம்ஸையை வாய்மொழியாகப் பேசி, செயலாற்றும்போது, கள்ளத்தனமாகப் பலாத்காரத்தையும், நாசவேலைகளையும் கையாண்டுவந்த ஆகஸ்டுக் கலகக்காரர்களாகிய காங்கிரஸ்காரர்கள், இப்பொழுது அவைகளைக்கண்டிக்கத் தொடங்கியிருப்பதுதான் ஆச்சரியமாக இருக்கிறது. வழியில் போவார் வருவார் எல்லோரையும் வீதியால் வெட்டிக் காமப் போர்க் களத்திற்கு அழைத்தி[illegible] வனிதை, கற்பின் திறம்பற்றிப் பேசிநின்ருல், அவளைப் பற்றி என்ன எண்ணுவர் அறிவுடையோர்? அவள் கொண்ட கோலத்திலே ஆச்சரியம் தோன்றுவதைப்போல தோழர் குமாரசாமியார் நிலையிலேயும் ஆச்சரியம் தோன்றுகிறது.

கம்யூனிஸ்டுகளைப் பற்றிக் கூற வருகிறபோது,

"சாதாரண மனித உணர்ச்சிகள்கூட இவர்களுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. ரயில்வே தண்டவாளத்தின் பிஷ்பிளேட்டுகளை எளிதில் அகற்றிவிடுகின்றனர். பிறகு நடப்பதைப்பற்றி அவர்களுக்குக் கவலையில்லை. பிரயாணிகள் நசுங்கி, பயங்கர வேதனைக் குள்ளாகி மடிவதையும் கைகால்கள் முடமாகித் தவிப்பதையும் குடும்பங்கள் சீர்குலைந்து அலைவதையும் அவர்கள் இருந்து பார்ப்பதில்லை-தங்களுடைய செய்கையால் ஏற்படும் கோரங்களைக்கண்டு இவர்கள் மனம் இறங்குவதில்லை" என்று கூறுகிருர்.

முதலமைச்சர்கம்யூனிஸ்டுகளை எந்த நிலையில் வைத்துக் குற்றஞ் சாட்டுகிருரோ, அதே நிலையில்தான் காங்கிரஸ் 'கண்ணியர்கள்' 1942 ஆகஸ்டில் இருந்தார்கள். இல்லையென்று 'தியாகிகள்' மறுக்கமாட்டார்களே. தண்டவாளத்தைப்பெயர்ப்பது, ரயிலைக் கவிழ்ப்பது, குழந்தைக்குட்டிகளை மடியச் செய்வது, தந்திக்கம்பியை அறுத்து, தபால் நிலையங்களைக் கொளுத்துவது, கச்சேரி ரிகார்டுகளைத்தீயிட்டுப்பொசுக்குவது, கொள்ளையடிப்பது, மாற்றுக்கட்சியினரைத் தாக்குவது போன்ற செயல்களைச் செய்துதானே 'தியாகி' என்ற பட்டத்தை அவர்கள் பெற்ருர்கள்!

முதலமைச்சர் ஏனே முந்திய நிலையை மறந்துவிட்டார், தெரியவில்லை!

"திராவகம், தடி, வில், நாட்டு வெடிகுண்டுகள் முதலிய எந்தப் பொருளையும் ஆயுதங்களாக உபயோகிக்கின்றனர்" என்று கம்யூனிஸ்டுகளைப் பற்றிக் காங்கிரஸ் முதலமைச்சர் மொழிகிருர். காங்கிரஸ்காரர்களுக்கு இவைகளும், இவைகளல்லாமல் கல், மண், சாணி, சோடாபாட்டில், அரிவாள், கத்தி, மிளகாய்ப் பொடி ஆகிய பொருள்களும் ஆயுதங்களாகப் பயன்பட்டு வருவதைத் தோழர் குமாரசாமியார் ஏனே மறைத்துவிட்டார். காங்கிரஸ்காரர்கள் இத்தகைய ஆயுதங்களைக் கொண்டுதானே திராவிட இயக்கத்தாரைச் சேலம், குடந்தை, நீடாமங்கலம், கரூர், மதுரை, சென்னை, கடலூர் போன்ற இடங்களில் தாக்கினர். காங்கிரஸ்காரர்கள் கம்யூனிஸ்டுகளைவிட எந்த விதத்தில் குறைந்தவர்களாக இருந்தார்கள்? கம்யூனிஸ்டுகள் மறைந்திருந்து செய்கின்றனர், காங்கிரஸ்காரர்கள் வெளிப்படையாகவே செய்தனர். இப்பொழுது வேண்டுமானல் கம்யூனிஸ்டுகள் செய்யும் நாச வேலைகளின் அளவு, காங்கிரஸ்காரர்கள் செய்வதைவிட சற்று மிகவாக இருக்கலாம். ஆனலும், இருவகத்தினரும் ஒரே தன்மையினர்! ஒரு குடும்பத்தினராக இருந்தவர்கள். ஆகவேதான், முதலமைச்சரின் மொழி இவ்வளவு ஆச்சரியத்திற்கும், ஐயப்பாட்டிற்கும் காரணமாக இருக்கிறது.

அமைதியான பிரசாரத்திற்கு சர்க்காரின் அனுமதி உண்டு என்ற முதலமைச்சரின் கூற்றில் ஒலிக்கும் ஒலி செயலில் ஒளியாக மாறவேண்டும் என்பதுதான் நமது உள்ளக்கிடக்கையாகும். ஒலியை ஒளியாக்க இனியேனும் முதலமைச்சர் முனைவாரா?

பொதுச் செயலாளர் சி. என். ஏ.
தஞ்சை மாவட்ட சுற்றுப்பிரயாணம்

※

16-6-50 — மாயவரம்
17-6-50 — திருவாரூர்
18-6-50 — நாகை
19-6-50 — திருத்துறைப்பூண்டி
20-6-50 — மன்னர்குடி
21-6-50 — பட்டுக்கோட்டை
22-6-50 — தஞ்சை
23-6-50 — சீர்காழி

சுற்றுப்பிரயாணத்தில் தோழர்கள் பெத்தாம்பாளையம் பி. பழனிச்சாமி ஈ. வெ. கி. சம்பத், என். எஸ். இளங்கோ, கே. கே. நீலமேகம் ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

* * *

தஞ்சை மாவட்ட தி. மு. க. செயலாளர் கே. கே. நீலமேகம் அறிக்கை

அண்ணு அவர்களின் தஞ்சை மாவட்ட சுற்றுப் பிரயாண நிகழ்ச்சியில் கண்டிருக்கும் ஊர்களில் கூட்டத்தை நடத்தும் தோழர்கள் முழு விவரம் தெரிந்துகொள்வது அவசியமானல், உடனே என்னை நேரில்வந்து பார்க்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

கே. கே. நீலமேகம்

ஜப்பான் இன்னும் யு.எஸ். உதவியை எதிர்பார்க்கிறது

டோக்கியோ, ஜூன் 13—ஜப்பானின் ஏற்றுமதி மிகவும் அதிகரித்திருந்தபோதிலும், அமெரிக்க உதவியை இன்னும் ஜப்பான் எதிர்பார்த்தே இருக்கவேண்டியிருக்கிறது என்று, ஜப்பான் வர்த்தகக் கைத்தொழில் இலாகா மந்திரி காரியாலய அறிக்கை கூறுகிறது.

ஜார்டனை வெளியேற்ற முயற்சி

அலெக்ஸாண்டிரியா, ஜூன் 13—எகிப்து ஜார்டன் தகராறு அரபு லீகையே தகர்த்துவிடும் போன்ற நிலைமையை ஏற்படுத்தி வருவதாகக் கூறப்படுகிறது. நேற்றிரவு அரபு லீக் கவுன்சில் கூடி மாறிலில் நின்றிருந்த விவாதத்தை மேலும் நடத்தியது. ஜார்டனை வெளியேற்ற வேண்டும் என்கிற எகிப்து தீர்மானம் மீது, காரசாரமாக விவாதம் நடைபெற்றது. எகிப்தும், ஜார்டனுக்குமிடையே சமரசம் ஏற்படுத்திவைக்க லிபியாவும், லெபனனும் செய்த முயற்சிகள் பலனளிக்கவில்லை.

ஜார்டன் தன்னுடன் இணைத்துக் கொண்ட கிழக்கு பாலஸ்தீனத்தை என்னவானாலும் விடுவதில்லை என்று விடாப்பிடியாக இருக்கிறது. எகிப்தும் அந்தல்லா கிழக்கு பாலஸ்தீனத்தைத் தன் தர்மகர்த்தா பொறுப்பில்தான் வைத்துக் கொள்ள வேண்டுமே யொழிய, இணைத்துக் கொள்ளக்கூடாது என்று விடாப்பிடியாக வற்புறுத்தி வருகிறது.

ஜார்டன் வெளியேற்றுவதைத் தன்னுல் ஆதரிக்கமுடியாது என்பதை இராக், எகிப்துக்குத்தெரிவித்திருக்கிறது. ஒரு மெம்பர் நாட்டை வெளியேற்றவேண்டும் என்ருல், அது ஏகமனதான முடிவாகஇருக்க வேண்டும் என்று அரபுலீக் சட்டதிட்டத்தில் இருக்கிறது. இராக், சிரியா இவை ஜார்டன் வெளியேற்றப்படுவதை ஆதரிக்காததால், மெஜாரிட்டி மூலம்தான் இதைச் செய்யமுடியும். ஆகவேமெஜாரிட்டி மூலம் ஜார்டனை வெளியேற்ற லீக் சட்ட திட்டங்களை முதலில் திருத்தியாக வேண்டும்.

இராக், லெபனன்சிரியா, இம்மூன்று நாடுகளும் இவ்விஷயமாக முடிவு செய்வதை ஒத்திப்போட முயற்சி செய்கின்றன.

புதிரக வலை ஆணி

ஆம்ஸ்டர், ஜூன் 13—என்லிலான் என்கிற புது நைலான் ஆணி, டச்சு ரசாயன கம்பெனி ஒன்றில் தயாரிக்கப்பட்டு வருகிறது. இதற்காக எம்மென் என்ற இடத்தில், பிரத்யேக தொழிற்சாலை ஒன்று கட்டப்பட்டிருக்கிறது.

வ. ஆ. மாவட்ட தி. மு. க. முதல் மாநாடு

24, 25-6-50 சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் மாநாடு நடத்த, சகல ஏற்பாடுகளும் விரைவாக நடைபெற்று வருகிறது. ஆரணி கோட்டை வெளியில், ராவ்சாகிப் ஏ. கே. சீனிவாச முதலியார் டவுன் ஹால் எதிரில், பந்தல் அமைத்துக்கொள்ளவும் பிரதிநிதிகளுக்கு உணவளிக்கவும் மாவட்ட கலெக்டரிடமிருந்து அனுமதி கிடைத்துவிட்டது. ஆகையால், மாநாட்டைச்சிறப்புடன் நடத்த மாவட்டத் தோழர்கள் உடனிருந்து ஒத்துழைக்கவேணுமாய் மிகப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். வணக்கம்

கே. பி. சுந்தரம்,
வரவேற்புக்குழுத் தலைவர்.

இனி நடப்பவை

சண்டக்காமுத்தூர்:— 16-6-50 அன்று தி.மு.க. பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் சி.பி. சிற்றரசு, புலவர் கிருஷ்ணசாமி, ஆ.கு.சர்மசாமி, ச.கு. தாண்டவன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

*

[illegible]:— சீர்திருத்த இளைஞர் மன்றத்தின் ஆதரவில் ஓர் பொதுக்கூட்டம் 15-6-50 அன்று நடைபெறும். அவ்வமயம் தோழர் சி. பி. சிற்றரசு சொற்பொழிவாற்றுவர்.

சுதந்திர ஆட்சியில்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வீலே, தேர்தல் பிரசாரம் செய்ய முற்பட்டுள்ளனர்.

அங்கும் இங்கும்!

இலண்டனில், சமீபத்தில், நடந்த மாபெரும் தேர்தலை நீங்கள் பத்திரிகையின் வாயிலாக அறிந்திருப்பீர்கள். அத் தேர்தலில், மாபெரும் இரு கட்சிகள் போட்டியிட்டன ஒன்று, சர்க்காரை நடத்தும் அட்லி கட்சி இக்கட்சியின் சார்பாக தேர்தலில் நின்ற அட்லி, தன்னுடைய மனைவி 'காரை' ஓட்ட, தானே நேரில் சென்று தேர்தல் பிரசாரத்தை தெருவெல்லாம் முழக்கினார். தங்கள் கட்சியின் செல்வாக்கைப் பயன்படுத்தி. ஆனால், இங்கு இவர்கள் என்ன செய்கிறார்கள்? மக்கள் சர்க்கார் என்று சொல்லிக்கொண்டு. மக்கள் தந்த பணத்தைக் கொண்டு, படாடோபமாக சுற்றுப்பிரயாணம் செய்கிறார்கள். கஞ்சியின்றி தவிப்போர் தந்த வரிக்காசைக் கரியாக்குகிறார்கள்—மேலும் ரேஷன் அளவு-8 அவுன்சாக இருந்து, 6 அவுன்சாக் குறையுமே என்று—பாட்டாளி மக்கள் எதிர்காலத்தை நினைந்து பயந்துகொண்டிருக்கின்றனர்.

இந்த நிலையில், ஆளவந்தார்கள் என்ன செய்திருக்கவேண்டும்? 'கூட்டத்தரமாட்டோம் என்றாலும், உள்ள அளவைக் குறைக்கமாட்டோம் நிச்சயம்' என்றாவது கூறியிருக்க வேண்டாமா? இந்தி—விஷயமாகத் தான் எடுத்துக்கொள்வோமே, இதிலும் ஏதாவது அருத்தமோ, நன்மையோ யிருக்கிறதா என்று பாருங்களேன் இவர்கள் கொள்கையால், நமது அர். கே. சண்முகம் அவர்களின் கண்கள் திறக்கப்பட்டன. (கைதட்டல்)

மத்திய சர்க்காரிலேகூட இவர்களுடைய திட்டம், அடிக்கடி மாறிவருகிறது பதவியேற்றச் சில ஆண்டுகட்குள், மூன்று நிதிமந்திரிகள் மாறிவிட்டனர்! காரணம், நிதிநிலை செவ்வனே இல்லாததே.

மிரட்டல் கொள்கை!

'பூமிக்கு அடியில் பல உலோகங்கள் உள்ளன. இவைகளைத் தோண்டியெடுத்தால், நம்முடைய குறைபாடுகளெல்லாம் ஒழிந்துவிடும். இத்திறமையான வேலையைச் செய்வதற்குக் காங்கிரஸ் ஒன்றால்தான் முடியும். ஆகவே, உங்கள் இஷ்டமில்லாவிட்டாலும், வரும் தேர்தலில் காங்கிரசுக்கு ஓட்டு போடவேண்டும், அதைத் தவிர, வேறு கட்சி கிடையாது என்றும், 'ஏழையாரின் பங்காளர்கள் நாங்கள் ஆகவே, எங்களைத்தவிர வேறுயாருக்கும், கண்டிப்பாய் ஓட்டு அளிக்கக்கூடாது'' என்றும், சுப்பையா என்பவர் பேசியிருக்கிறார், பெரிய விஞ்ஞானி போல!

இந்தத்திட்டங்களைப் பல ஆண்டுகட்கு முன்பே நாம், 'பொருளாதாரம்' என்ற அடிப்படையில், பொது மேடைகளில் பேசியும், பத்திரிகையின் வாயிலாகவும் அறிவித்து வந்துள்ளோம்.

குற்றச்சாட்டு!

'தியாகிகள்' ஒருவர் மீது ஒருவர், பலவிதமான லஞ்ச குற்றப்பத்திரிகைகளை வாசித்தளித்துக் கொள்கின்றனர். இதில் மந்திரி பக்தவத்சலம் கோபால்ரெட்டி, பிரகாசம் ஆகியவர்களின் பெயர்கள் பிரதானமாக - பிரபலமாக அடிபடுகிறது! இவர்களின் 'தியாகத்தில்' நாம் எள்ளளவும் சந்தேகம் கொள்ளவில்லை ஆயிரக்கணக்கான ரூபாய்கள் வருமானமுள்ள வக்கீல் தொழிலை விட்டுவிட்டு, நாட்டிற்காகத் தங்கள் தியாகத்தை அர்ப்பணித்தவர்கள். ஆனால், இவர்கள் ஒருவர் மீது ஒருவர் சுமத்தும் குற்றச்சாட்டின் மூலம், இவர்களின் 'அந்தரங்க' விஷயங்கள் அம்பலத்துக்கு வெளிவருகின்றன. இவர்கள், சுதந்திரம் ஒரு இலட்சியமென்றும். அந்த இலட்சியத்தை அடைய தாங்கள் இரத்தம் சிந்துவதாகவும் முன்பு கூறினர். அந்தச் சுதந்திரம் என்ற இலட்சியம் கிடைத்த பின்பு,ஏன இன்னும் அந்தஸ்தாபனத்தை விடாப்பிடியாகப் பிடித்துக்கொண்டிருக்கவேண்டும்? கிடைக்கசுதந்தரத்தைக் காப்பாற்றவேண்டிய பொறுப்பு இவர்களுக்கு இருக்கிறதென்பதை ஏன தெரிந்து கொள்ளவில்லை? கிடைத்த சுதந்தரத்தைக் காப்பாற்றுவதை விடுத்து, அவர்களுக்குள்ளேயே 'போரம்' பேசுகின்றனர்! இது சரியா? நீதியா? முறைதானா?

அதிகாரத்தின் ஆணவம்

காந்தி நிதி என்றும், கஸ்தூரிபாய் நிதியென்றும் பல கோடிக்கணக்கான பணத்தை வசூலித்து பாழாக்கியவர்கள் தியாகிகளின் நிதி' என்று நிதி திரட்டி, போராட்டத் தியாகிகளுக்கு உதவி அளித்திருக்கலாம். அதைவிட்டு, தங்கள் கையில் அதிகாரம் இருக்கிறதென்ற ஆணவத்தால், சர்க்கார் கையில் உள்ள நிலங்களைப் பங்கு போட்டுக்கொண்டது நியாயம்தானா? சர்க்காரின் கொள்கையை மறுக்கக்கூடிய டலர், நாட்டிலே வாழ்கின்றனர். இவ்வளவு மாறுபட்டக் கருத்துக்களை அலட்சியம் செய்து, ஆணவத்தால், ஆளவந்தார்கள், நிலத்தைப் பங்கு போட்டுக்கொண்டது தவறு என்பேன்.

நான் மந்திரியாக வந்தவுடன், எனக்காக ஒரு ஜமீனும், தோழர் நெடுஞ்செழியனுக்காக ஒரு ஜமீனும் கொடுத்துவிட்டால், மீதமுள்ள மீளாத்துயரில் வாடும் மக்கள், சமுத்திரக்கரை நாடிச் செல்வதைவிட, வேறு என்ன இருக்கமுடியும்?

மக்கள் சர்க்கார்தானா?

சமீபத்தில், சேலம் சிறையிலே, 20 கைதிகளைச் சுட்டுக்கொன்றது, இந்தச் சுதந்தர அரசாங்கம். பின்னர், மந்திரி மாதவமேனன் சிறைக்குச் சென்று, சட்டசபையிலே சில விளக்கம் தந்தார். இது நாகரீக சர்க்கார் என்று கூறப்படும், சர்க்கார் செய்யக்கூடிய செயலல்ல. இதன் மீது, நாட்டிலே பெரும் புரட்சி ஏற்பட்ட பின்னர், கண்துடைப்புக்காக மத்தியஸ்தர் ஒருவரை அனுப்பி, முழுவிபரம் அறிக்குவரச் செய்தனர். அந்த விசாரணைக் குழுவின் அறிக்கை, தங்களுக்கு கிடைத்துவிட்டதென்றும், அதை வெளியிடப்போவதில்லை யென்றும் சர்க்கார். அறிக்கைவெளியிட்டுள்ளனர். இதில், ஏதாவது நீதியோ—நேர்மையோ நம்மால் காண முடியுமா? கம்யூனிஸ்டுகள் என்பதற்காக, இருபது பேர்களைச் சுட்டுக்கொன்றது இன்றைய சர்க்கார். இதைக் கேட்பதற்கு நாதியில்லையா? நாம் கேட்டால், நம்மை 'கருப்பு கம்யூனிஸ்டு' என்று சர்க்கார் நம்மைக் குறைகூறுகின்றது. நான், அதைப்பற்றிக் கவலைப்படவில்லை, மக்களின் குறைகளை எடுத்துரைக்க வேண்டிய பத்திரிகைகளின், நீதியின் பேரிலே நிற்கவேண்டிய பத்திரிகைகளின் வாய் அடைத்துப் போனதைக் கண்டுதான் நான் ஆச்சரியப்படுகிறேன்.

நீதி-நேர்மை எங்கே?

ஆங்கிலேயர்கள், இந்த நாட்டை ஆளும் போது, தொழிலாளர்களுக்காக - சில நீதியும், நேர்மையும் இருக்க முடிந்தது. ஆனால், இன்று மக்கள் சர்க்கார் என்று கூறிக்கொள்ளும் ஆட்சியிலே இவைகளைக்காண்பது அரிது. மிகமிக அரிதாகிவிட்டது தேர்தல் காலங்களில், மக்களை அணுகி, ஓட்டு சேகரம் செய்தனர் அதனால் மந்திரிகளாக முடிந்தது. அதே மக்கள் சஞ்சலம் அடைந்தபோது, இவர்கள் நேரில் வந்து மக்களின் குறையைத்தீர்ப்பதற்குப் பதில், கொடூரமான போலீஸ் அதிகாரிகள் பெரிய பெரிய லாரிகளில் - படைவரிசையாக ஊர்வலம் வந்தனர்-மக்களைத் தெருவில் இழுத்துப்போட்டு உதைத்தனர்! மந்திரிகள் போன் மூலம், செய்தி அறிந்தனரே அன்றி. மக்களிடம் வந்தனரோ? முன்பு, ஏகாதிபத்யம் நம்மை ஆண்ட காலத்தில், பல இடங்களில் 'ஜாலியன் வாலாபாக்'கை; நடத்தினர். 'டையர்' என்ற ஆங்கிலேயன் கொடுமைகள் பல இழைத்தான். இன்றைபத் தினம், அவன் ஆட்சியினைத் தோற்கடித்துவிட்டதே இந்த மக்கள் ஆட்சி?

கர்னூடிக்மில் மித்த உழைப்பாளர்கள் வேலைநிறுத்தம் செய்த காலத்தில். மந்திரியைப் பேட்டிகாண ஊர்வலமாகச் சென்றனர். இவர்கள் மீது, காரணம் இன்றி கண்ணீர்ப்புகை பிரயோகிக்கப்பட்டது. இதுதான் நாகரீகச் சர்க்காரின் அடையாளமா? இத்திட்டத்தை மக்களிடம் காட்டித்தான் நீங்கள் அரசு மன்றம் ஏறினீர்களா? எங்கே சொல்லுங்கள்? உங்கள் ஆட்சிகாலத்தில், நீங்கள் செய்த நல்ல வேலைத் திட்டங்கள் உண்டா? ஆங்கிலேயர் தங்க பதினாறு அவுன்ஸ் அளவு அரிசியை, இந்தப் புண்ணியவான்கள் எட்டு அவுன்சாக ஆக்கினார்கள். இப்பொழுது ஆறு அவுன்ஸாக்கு நின்டாட்டத்துக்கு வந்துவிட்டது. ஏதாவது புதியதொழில்களை உண்டுபண்ணியதுண்டா? திட்டம் தீட்டியதுண்டா? எண்ணமாவது இவர்களுக்குஉதித்ததுண்டா? மாறாக, இருந்த ஆலைகளை, தங்களது உறவினர்களுக்கு மாற்றித் தந்தார்களே தவிர ஆங்கிலேயர்கள் உபயோகித்துத் துப்பாக்கியை எப்படி உபயோகிப்பது என்று பரீட்சைப்பார்க்க, நம்மை ஒரு மடலாக -மரக்கட்டையாகப் பயன்படுத்திக் கொண்டார்களே தவிர, வேறு இன்னது செய்தோம் என்றுபட்டியலைத் தரமுடியுமா?

வரியில்லாத சர்க்கார்

நாங்கள் ஆட்சிக்கு வந்தால் வரிகளை ஒழித்தே விடுவோம், குறைக்ககூட மாட்டோம், என்று கூறியவர்கள், இன்று இல்லாத வரிகளையெல்லாம் தேடிப்பிடித்து, மக்கள் தலையில் சுமத்துகின்றனர்! வரிதான், 'கர்ப்பகவிருக்ஷம்'என்று கோபாலர் கூற, மற்றய மந்திரிகள் தாளம் போடுகின்றனர். 'வரியையே ஒழித்துவிடுவோம்' என்று கூறும், மந்தமதியினர் அல்ல நாங்கள், வரியில்லாத ஒரு சர்க்கார் என்றும் வாழவே முடியாது இவர்கள் வரியையே ஒழித்துவிடுவோம் என்று கூறியதால் தான், இதுபற்றி நான் கூற வேண்டியேற்பட்டது.

இப்படி, இவர்கள் வரியினை வசூல் செய்வதற்கு ஒரு விசித்திர காரணத்தைக் காட்டுகின்றனர். அதுதான் மதுவிலக்கு. இந்த மதுவிலக்காவது, சரிவர நடைபெறுகிறதா என்றால், அது பற்றிப் பொது மக்களுக்கே நன்கு தெரியும்!

முதலாளிகளின் சர்க்கார்

மத்திய சர்க்காரிலே, நிதி மந்திரியாக இருந்த லியாகத் அலிகான், வருமானமுள்ள முதலாளிகளுக்கு, 'சூப்பர் டேக்ஸ்' அதாவது வருமானத்தில் பாதி பகுதியை, அரசாங்கத்திற்கு வரியாகத் தரவேண்டும் என்று சட்டம் விதித்தார்.

தேசியத் தோழர்கள் மந்திரிகளாக வந்தவுடன், அந்த வரிகளை ஒரே அடியாக மாற்றிவிட்டார்கள். இது எதைக் காட்டுகிறது? முதலாளித்வம் முறியடிக்கப்படவேண்டும் என்றும், கள்ள மார்க்கெட்காரர்கள் கடும் தண்டனைபெறவேண்டும் என்று சொன்னவர்கள், இன்று அதற்கு நேர்மாறாக, நடந்துகொண்டு வருகின்றனர்.

ஆகவே, மாநாடு கூட்டி, மனம்போனபடி பேசி, உல்லாசமாகப் பயன் படுத்தாமல் இதுபோன்ற பயங்கரமான—பாவமற்றச் செய்கைகளை, நாட்டிலே, எடுத்துச்செல்லவும், நல்ல தீர்ப்பு கிடைக்கவும் திராவிட முன்னேற்றக்கழகம் பாடுபடுகிறது.''

தி. மு. கழகச் சொற்பொழிவுகள்

15 - 6 - 50

மேட்டுப்பாளையம் (நீலகிரி):—சி. பி. சிற்றரசு.

16 - 6 - 50

சுண்டக்காமுத்தூர் (கோவை):—சி. பி. சிற்றரசு.

மயவரம்:—சி. என். அண்ணாத்துரை, பெத்தாம்பாளையம் பழனிச்சாமி, ஈ. வி. கே சம்பத், என். எஸ், இளங்கோ, கே. கே. நீலமேகம்.

சனிக்கிழமை நிகழ்ச்சிகள்

சோழவந்தான், ஜூன் 10—மதுரை மாவட்ட தி. மு. கழக முதலாவது மாநாட்டின் தலைவர் தேர்தல், இன்று மாலை 4-30 மணிக்கு நடைபெற்றது. மாநாட்டு வரவேற்புக்குழுத் தலைவர் தோழர் தா. ஆவடையப்பன் அவர்கள், தோழர் ஈ. வெ. கி சம்பத் அவர்களின் பெயரை முன்மொழிந்தார்கள்.

அவரை வழிமொழிந்து தோழர்கள் பொன்னுக்குறிச்சி சோமசுந்தரம், திருச்சி டி. கே. சீனிவாசன், மதுரை கே எஸ், ராஜமான், பெத்தாம்பாளையம் பி. பழனிச்சாமி, கோவில்பட்டி ஈ. வி. ஏ. வள்ளிமுத்து, சென்னை கே. கோவிந்தசாமி, சேலம் ஏ. சித்தையன், விருதுநகர் ஆ. வ. ப. ஆசைத்தம்பி, மூவலூர் இராமாமிருதத்தம்மையார், சென்னை என் வி. நடராசன், இரா. நெடுஞ்செழியன் ஆகியோர் பேசும்போது, தலைவர் ஈ. வி. கே. சம்பத் அவர்களின் திறமையையும், சேவையையும் வெகுவாகப் பாராட்டிப் பேசினார்கள்.

இத்துடன் இரவு 7 மணிக்கு மாநாட்டு முதல் நாள் நிகழ்ச்சி சிறப்புடன் முடிவடைந்தது. இரவு உணவுக்குப் பின்னர் இரவு 10-30 மணிக்கு, அழகரடி வேலாயுதம் நினைவுப்படிப்பகத் தோழர்களால் "இலை" என்ற நாடகம் நடைபெற்றது.

இரவு நாடகத்திற்கு உள்ளூர், வெளியூர்களிலிருந்து சுமார் 10 ஆயிரம் பேர்களுக்கு மேல் வந்து கூடியிருந்தனர்.

நாடகத்தைத் தோழர்கள் சி. என். அண்ணாதுரை, கே ஆர். இராமசாமி ஆகியோரும் கண்டுகளித்தனர்.

நாடகத்திற்குத் தோழர் சி. பி. சிற்றரசு தலைமைவகித்துப் பேசும்போது, நாடகங்கள் மக்களை நல்லமுறையில் பேசப் பழக்குவதாக அமையவேண்டுமென்றும், அது போன்ற நாடகங்களையே மக்கள் விரும்பி வரவேற்பார்களென்றும் சொன்னார். இத்துடன் முதல் நாள் நிகழ்ச்சி சிறப்பாக முடிந்தது. (டி)

மதுரை மாவட்ட தி. மு. மாநாட்டு, வரவேற்புக் கழக தலைவர் தோழர் ஆவடையப்பன்.

தி. மு. கழக பொதுக்கூட்டங்கள்

தென்திருப்பேரை

தென்திருப்பேரை, ஜூன் 8.—

இவ்வூர் தி. மு. கழக சார்பில் 23-5-50-ம் நாள் மாலை 7 மணிக்கு தென்திருப்பேரை மணல்மேட்டில் அமைக்கப்பட்ட அர்ச்சுனன் பந்தலில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் தோழர் சி. சந்திரன் தலைமை வகித்து தோழர் அண்ணாதுரை அவர்கள் திராவிட நாட்டிற்கு செய்துவரும் தொண்டுபற்றி கூறி கூட்டத்தைத் துவக்கிவைத்தார்கள். ஏரல் முன்னாள் கழக செயலாளர் தோழர் சிவசங்கு அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகம் பற்றியும் இன்றைய அரசியல் நிலை பற்றியும் பேசினார்கள். தோழர் இல. அறவேந்தன் அவர்கள் திராவிட சமுதாயம் அடைந்துள்ள இழிநிலை பற்றியும் உழவர் படும் இன்னல் பற்றியும் பேசினார்கள்.

தோழர் எம். எஸ். இராமசாமி அவர்கள் (அருப்புக்கோட்டை) அரசியல் சமூக பொருளாதாரம் முதலியவைகள் பற்றியும், அதற்கு திராவிட முன்னேற்றக் கழகம் செய்துவரும் போராட்டங்கள் பற்றியும் மக்களனைவரும் திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்து ஆதரிக்கும்படியும் கேட்டுக்கொண்டு சுமார் 1-55 மணி நேரம் பேசினார்கள். கடைசியாக துணைச் செயலாளர் மு.ச. மணிமொழியன் நன்றி கூற கூட்டம் இனிது முடிந்தது.

சக்கரமல்லூர்

இவ்வூரில் 8-6-50 இரவு 8-மணிக்கு தி. மு. க. பொதுக்கூட்டம் உள்ளூர் தோழர் இராமநுஜம் அவர்கள் தலைமையில நடந்தது. வேலூர் சி. பி. சிற்றரசு அவர்கள் தி. மு. கழகத்தின் திட்டங்களையும் போக்கையும் விளக்கி 2 மணி நேரம் பேசினார். தோழர் புலவர் மணி எழிலன் பொன்னம்பலம் ஆகியோர் சிறிதுநேரம் பேசிய பின், நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

மேட்டூர்

மேட்டூர், ஜூன் 9—

4-6-50 மாலை 6-மணிக்கு மேட்டூர் பொதுஜன சேவா சங்க மைதானத்தில், தி. மு. க. பொதுக்கூட்டம் தோழர் அ. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றது. அதுசமயம், வேலூர் சி. பி. சிற்றரசு அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகம் ஏன் ஏற்படுத்தப்பட்டது என்பதைப் பற்றியும், மதத்தால் ஏற்படும் தீமைகளையும், தற்கால அரசியல் நிலைபற்றியும் சுமார் 2 மணி நேரம்பேசினார். மழை அடிக்கடி தூறிக்கொண்டிருந்தும் பொதுமக்கள் கலையாமல் உட்கார்ந்திருந்தது குறிப்பிடதக்கது. இரவு சுமார் 9-30மணிக்கு கூட்டம் இனிது முடிந்தது.

திட்டக்குடி

திட்டக்குடி, ஜூன் 9—

4-6-50 ஞாயிறு மாலை 6-மணிக்கு திட்டக்குடி ரேடியோ திடலில் திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதுசமயம் மாலை ஊர்வலத்திற்குப்பின் டி. கே. துரை அவர்களின் திராவிட இசைக்குப்பின், பொதுக்கூட்டம் இரா. இரங்கசாமி அவர்களின் தலைமையில் கூட்டம் ஆரம்பமாயிற்று. முதலில் பேசிய திட்டக்குடி தோழர் ம. பொன்னம்பலம் அவர்கள் சென்னை அரசாங்கம், தமிழர்கள் மீது இந்தி மொழியை, கட்டாயமாக திணிப்பதின், அறிவற்ற போக்கை, கண்டித்தும், சென்னை அரசாங்கம், மறுமுறையும்மொழிப் போராட்டவிருந்திற்கு, தம்மை அழைக்கிறதென்றும், அண்ணாதுரை அவர்கள் அழைப்பு கொடுத்து, தமிழர்களை அறப்போர்செய்ய அழைக்கும்போது தான் தீவிரமாக போராட்டத்தில் ஈடுபடப்போவதாக கூறியும், சோஷிடத்தின் பித்தலாட்டங்களைபற்றிப் தெளிவ கப்பேசியபின், தோழர் டி. கே. துரை அவர்கள் தென்னாட்டு காங்கிரஸ் அரசாங்கம், வடநாட்டாருக்கு வால்பிடிக்கும் போக்கை கண்டித்து சிறிது நேரம் பேசினார்கள். கடைசியாக குறிஞ்சிப்பாடி இரெ. இளம்வழுதி அவர்கள் தற்கால அரசியல் நிலைபற்றியும், வடநாட்டு அரிசியை தென்னாட்டின்மீது 108 லட்ச ரூபாய் அதிக விலைக்கு விற்ற கொடுமையைக் கண்டித்தும், காங்கிரஸ் ஊழியர்களின் பதவி பிடிக்கும் போக்கை வெறுத்தும், திராவிட மக்களின் பண்பாட்டை விளக்கி சுமார் 1-30 மணி நேரம் விரிவாக சொற்பொழிவாற்றினார்கள். தலைவர் முடிவுகூறிய பின், நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிந்தது.

ரயில் வண்டிகளை நிறுத்திய நாய்

லண்டன், ஜூன், 13—

லண்டன் பாதாள ரயில்வேயான பிக்காடிலி ரயில் சர்வீஸ் ஒரு நாயினால் நிறுத்தப்பட்டுவிட்டது. ஒரு ஸ்டேஷனில் நாய் ஒன்று பாதாள குகைக்குள் புகுந்துவிட்டது. அதை நாத்திப் பிடிக்க உடனே மின்சாரம் எடுக்கப்பட்டது. இரு ஸ்டேஷன்கள் தாண்டியபின்னர், நாய் பிடிபட்டது. அதன்பின்னர் ரயில்வேக்கள் விடப்பட்டன.

கொப்பரை ஏற்றுமதிக்கு இலங்கைத் தடை

நீக்குவதுபற்றி ஆலோசனை

கொழும்பு, ஜூன் 13—

கொப்பரைகளை இலங்கைக்கு வெளியே அனுப்பக்கூடாது என்ற தடை, இலங்கையில் இப்பொழுது இருந்து வருகிறது.

இத்தடையை நீக்கும்படி தேங்காய் உற்பத்தியாளர்கள் சர்க்காரைக் கேட்டுக்கொண்டிருக்கின்றனர். தடையை நீக்கி சர்க்கார் உத்திரவு பிறப்பிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வ. ஆ. மாவட்ட தி. மு. க. முதல் மாநாடு

வரவேற்புக் குழுக் கூட்டம்

ஆரணி, ஜூன் 11—

வரவேற்புக் குழுக் கூட்டம் கணேசர் ரேடியோ நிலையத்தில், தலைவர் கே. பி. சுந்தரம் தலைமையில் கூடி, கீழ்க்கண்டபடி தீர்மானிக்கப்பட்டது.

(1) மாநாட்டுத் தலைவராக சென்னைத்தோழர் க. அன்பழகன் அவர்களையும், துவக்குபவராக அருப்புக்கோட்டைத் தோழர் எம். எஸ். ராமசாமி அவர்களையும் தேர்ந்தெடுக்கப்பட்டது

(2) உணவு பராமரிப்புக் குழுவுக்குக் கீழ்க்கண்டவர்களை உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. தோழர் எம். கேசவன், பு. ந. பலராமன், சோ. கேசவன், அ. ப. நடராசன், கே. பி. நடேசன்

(3) பந்தல் அமைப்புக் குழு தோழர்களாக அ. சி. ராதாகிருஷ்ணன், ஏ. ஆர். தேப்பெருமாள், ஏ. கே. ஐம்புலிங்கம், ஆர். குட்டி ஆகியோரை தேர்ந்தெடுக்கப்பட்டது.

(4) தொண்டர்படைத் தலைவராக தோழர் வி. பி. சாமி அவர்களையும், துணைத் தலைவராக கே. பி. நடேசன் அவர்களையும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

(5) மாநாட்டுப் பந்தலில் விளக்குகள், ஒலி பெருக்கி அமைக்க ஆரணி கணேசர் ரேடியோ நிலையத்தாரை ஏற்பாடு செய்யப்பட்டது.

விசித்திர திருட்டு

சாமானுடன் பணமும் வாங்கிச் சென்றான்

சென்னை, ஜூன். 13—

மைலாப்பூர் மௌபரீஸ் ரோடிலுள்ள ஒரு கடையில், மோசடியாக மூன்று படுக்கைகளை ரூபாய் 75-க்கு வாங்கி, சில்லரையில்லை என்று சொல்லி நூறு ரூபாய்நோட்டு அனுப்புவதாக வாக்கி 25 ரூபாயையும் அபகரித்துச் சென்ற ஒரு நபரைப் போலீஸார், தேடிக்கொண்டிருக்கின்றனர். இந்நபர், கடையில் வேலைபார்த்த சிறுவனிடம் ரூபாய் 25 அனுப்பி வைக்கும்படி கடைக்காரரைத் தூண்டி, உடனழைத்துச் சென்றுபோம் வழியில் அந்த 25 ரூபாயையும் பையனிடமிருந்து வாங்கிக்கொண்டு பையனை ஏமாற்றி விட்டு ஓடிவிட்டான். கடைக்காரர் தெரிவித்த அடையாளமுள்ள மனிதனைப் போலீசார் தேடிக்கொண்டிருக்கின்றனர்.

இலங்கைரயில்வேக்கள்

நஷ்டத்தில் வேலை செய்கின்றனவாம்

கொழும்பு, ஜூன் 13—

இலங்கை ரயில்வேக்கள் பெரும் நஷ்டத்தில் வேலை செய்வதாகத் தெரியவருகிறது.

யுத்தத்திற்கு முன்பு வருடத்தில் ரூ. 4000000 நஷ்டம் ஏற்பட்டு வந்ததாம். 47-48ல் ரூ. 8000000 தான் நஷ்டம் ஏற்பட்டதாம் இப்பொழுது பட்ஜெட்டில் ஒதுக்கியுள்ள ரூ. 80000010க்கு மேல் நஷ்டம் ஏற்படுவதாகக் கூறப்படுகிறது.

நஷ்டம் நீடிக்குமானால், ரயில்வே பிரயாணிகள் கட்டணம், சார்சல் சார்ஜ் இவைகள் அதிகரிக்கப்படலாமெனத் தெரிகிறது.

வ. ஆ. மாவட்ட

தி. மு. க. முதல் மாநாடு

ஜூன் 24, 25 சனி, ஞாயிறுகளில்

ஆரணியில் நடைபெறும்

தலைவர் :—க. அன்பழகன்

துவக்குபவர்:—எம். எஸ். ராமசாமி

பொதுச் செயலாளரும், கழக சொற்பொழிவாளர்கள் பலரும் கலந்துகொள்வர்

கே. ஆர். ராமசாமி, சி. என். ஏ. நடிக்கும்

"சந்திரமோகன்"

நாடகம் நடைபெறும்

வரவேற்புக்குழுவினர்

தாராபுரம் தொகுதியில்

30—6—50ல் நடைபெறும்

சென்னை சட்டசபை தேர்தலில்

ஜனராஜ்ய கட்சி அபேட்சகர்

திரு. S. ரத்னசாமி கவுண்டருக்கு

பச்சைப் பெட்டியில்

தயவுசெய்து ஓட்போடவும்

—ஜனராஜ்ய கட்சி

ஸ்பெயின் சர்க்கார் முன்புள்ள பிரச்னைகள்

லண்டன், ஜூன் 13—

ஸ்பெயின் சர்க்கார் முன்புள்ள பிரச்னைகள் என்னவென்பதை, அங்கு சென்று திரும்பியுள்ள ஒரு பிரிட்டிஷ் பத்திரிகாசிரியர் குறிப்பிட்டிருக்கிறார். அவை உணவுப் பொருள்கள், விலைகள் ஏற்றக்கள்ள மார்க்கெட், மின்சாரசப்ளை போதிய அளவுக்கு இல்லாததால் தொழில் பாதிப்பு, மோசமான நிலைமையில் நடத்தப்படும் போக்குவரத்து முதலியவைகளாம்.

தெ. கி. ஆசியா முஸ்லீம் மாநாடு

சிங்கப்பூரில் நடைபெறும்

சிங்கப்பூர், ஜூன் 13—

தென் கிழக்கு ஆசியா முஸ்லீம் மாநாட்டை சிங்கப்பூரில் நடத்துவதென்று, சிங்கப்பூர் முஸ்லீம் லீக் தீர்மானித்திருக்கிறது.

மலேயா, இந்தோனேஷியா, இந்தோசீனா, தாய்லாந்து, பர்மா, பிலிப்பைன்ஸ், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளிலுள்ள முஸ்லீம் ஸ்தாபனங்களுக்கு அழைப்பு அனுப்பப்படும்.

பாகிஸ்தான் பிரதம மந்திரி தோழர் லியாகத்அலிகான், சிங்கப்பூர் வரும் சமயத்தில், இம்மாநாடு வைத்துக்கொள்ளப்படும் என்று தெரிகிறது.

சிங்கப்பூருக்குப் பண்டித நேரு வரும்போது அவருக்கு வரவேற்பளிக்கவும் ஒரு ஸ்தாபனம் உத்தேசித்திருக்கிறது.

இலங்கை கிராமப் பகுதிகளில் ஆஸ்பத்திரிகள்

கொழும்பு, ஜூன் 13—

இலங்கைக் கிராமப் பகுதிகளில் கூட்டுறவு ஆஸ்பத்திரிகள் ஆரம்பிக்கப்படலாம் என்று தெரிகிறது.

இந்த ஆஸ்பத்திரிகளுக்குக் கட்டிடங்கள் கட்டித் தருவதின் மூலமும், குறிப்பிட்ட காலத்திற்கு வைத்திய நிபுணர்களின் சேவை கிடைக்கும்படி செய்தும், சர்க்கார் உதவும் என்று பிரபல டாக்டர்கள் யோசனை கூறியிருக்கின்றனர்.

தூத்துக்குடி எக்ஸ்பிரஸில் பிணம்

சென்னை, ஜூன். 13—

இன்று காலை சென்னைக்கு வந்து சேர்ந்த தூத்துக்குடி எக்ஸ்பிரஸின் பெண்கள் பெட்டியில், ஒரு பெண்ணின் பிரேதத்தைத் தாம்பரம் போலீஸார் கண்டு பிடித்தனர். பெண்ணின் வயது சுமார், 20 இருக்குமென மதிப்பிடப்படுகிறது. அவரிடமிருந்து கிடைத்த ஒரு கடிதத்தில், தான் தற்கொலை செய்துகொண்டிருப்பதாகக்காணப்பட்டது. அக் கடிதத்தில் மிஸ், தேவசகாயம் என்ற கையெழுத்தும் காணப்பட்டது. எந்த ஊர் வாசியென்றும், தற்கொலைக்குக்காரணம் என்னவென்றும் தெரியவில்லை. போலீசார் விசாரணை செய்துவருகின்றனர்.

பெருமாள் கோவிலில் களவு

சென்னை, ஜூன் 12—

அமிஞ்சிக்கரை பெருமாள் கோவில் தோட்டம்தெருவிலுள்ள, பெருமாள் கோவிலில் கடந்தவாரத்தில் விக்கிரகத்துக்கு அணிவித்திருந்த பொன், வெள்ளி ஆபரணங்கள் களவு போயின. திருடன் கோவில்கோபுரத்தின் ஒருகலசத்தைப் பிரித்துக்கொண்டு உள்ளே நுழைந்து நகைகளை திருடிச் சென்றதாகச் சொல்லப்படுகிறது.

விமானப் பிரயாணம் பதிவுசெய்யப்படுகிறது

லண்டன், ஜூன் 12—

அட்லாண்டிக் மீது விமானப் பிரயாணம் செய்பவர்களின் எண்ணிக்கை இம்மாதத்தில்தான் மிகவும் அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நியூயார்க்கிலிருந்து லண்டனுக்கு ஒரு வாரத்தில் சுமார் 4000 பேர் பிரயாணம் செய்கிறார்களாம். —ரூட்டர்

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthu mari Chetty St. Madras-1.